In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No. 49/2021

Prosecution witness P.W.3

Name: Nagaselvam

Calling:

Father Name:

Religion:

Village:

Caste:

Taluk:

Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 20-01-2025.

**(Accused present. Accused absent, petition u/s 317 Cr.C.P. filed and allowed,)**

முதல் விசாரணை :-

நான் மாவூத்தன்பட்டியில் வசிக்கிறேன். அசா1 என் தம்பி. அசா2 என் அப்பா. இறந்துபோன செண்பகராஜன் என்னுடைய அண்ணன். ஆஜர் எதிரி ராம்குமாரைத் தெரியும். என் அண்ணன் ஆஜர் எதிரியின் கிளப்பில் வேலை பார்த்து வந்தார். என் அண்ணன் சம்பளம் கேட்டு சுமார் 5 வருடங்களுக்கு முன்னர் கிளப்பிற்கு போனார். சம்பளம் கேட்ட இடத்தில் அவர்களுக்குள் வாக்குவாதம் வந்தது. என் அண்ணனை எதிரி ராம்குமார் கத்தியால் இடது அல்லையில் சம்பளம் கேட்டதற்கு குத்திவிட்டார். எதிரி ராம்குமாருடன் வேலை பார்க்கும் செந்தில்குமார் அங்கு இருந்தார். அவர் பீர் பாட்டிலைக்கொண்டு என் அண்ணனின் மண்டையில் அடித்துவிட்டார். அங்கிருந்த பசங்கள் என்னிடம் மேற்படி தகவலைச் சொன்னார்கள். நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் வைத்து என் அண்ணனை பார்த்தேன். அப்போது என் அண்ணன் பேசும் நிலையில் இருந்தார். அப்போது அங்கு போலீசார் வந்து என் அண்ணனிடம் வாக்குமூலம் வாங்கினார்கள். அதன் பின்னர் என் அண்ணனை மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு ஒருவாரம் இருந்தார். பின்னர் இறந்துவிட்டார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.01.20 16:59:20 +0530

Principal District Judge,
Dindigul.